தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பிலவ, ஆனி 10, திருவள்ளுவர் ஆண்டு–2052

2021 ஜூன் 24, வியாழக்கிழமை

சென்னை–600 002, வாலாஜா சாலை, ஓமந்தூரார் அரசினர் தோட்டம், கலைவாணர் அரங்கம், மூன்றாவது தளத்தில் உள்ள பல்வகை கூட்டரங்கத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. மு. அப்பாவு** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

“முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும்.”

நீதி நெறியுடன் அரசு நடத்தி, மக்களைக் காப்பாற்றும் ஆட்சியாளர்தான் மக்களுக்குத் தலைவர் எனப் போற்றப்படுவார்.

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

1. அறிவிப்புகள்

(அ) “காகிதமில்லா சட்டமன்றம்” என்னும் இலக்கினை எய்திடும் வகையில் ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது அனுமதிக்கப்பட்ட திருத்தங்கள் உறுப்பினர்களுக்கு மென்பொருள் வடிவில் மின்னஞ்சல்மூலம் அனுப்பி வைக்கப்பெறுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. காகிதமில்லா சட்டமன்றம் என்னும் நிலையினை உருவாக்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கையின் தொடர்ச்சியாக ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களால் அளிக்கப்பட்ட, அனுமதிக்கப்பட்ட திருத்தங்களின் ஐந்து பிரதிகள் மாண்புமிகு உறுப்பினர்களின்*

பார்வைக்காக கலைவாணர் அரங்கத்தின் முதல் தளத்தில் உள்ள சட்டமுன்வடிவு பிரிவு–1–ல் வைக்கப்பட்டுள்ளன. அவற்றின் மென்பொருள் வடிவம் (soft copy) PDF முறையில் அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் மின்னஞ்சல்மூலம் அனுப்பப்பட்டுள்ளன என்பதை பேரவையின் அனுமதியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

2. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம்— விவாதத்திற்கான பதிலுரை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம். ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது கொடுக்கப்பட்ட திருத்தங்கள் இன்று முன்மொழியப்பட்டு, வழிமொழியப்பட வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. வேலுமணி அவர்கள்.

திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு கீழ்க்கண்ட என்னுடைய திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்:

"1. கோயம்புத்தூர் முதல் கரூர் வரை உள்ள தேசிய நெடுஞ்சாலையை 6 வழிச் சாலையாக மாற்றுவது குறித்தும்;

2. கோயம்புத்தூர் மெட்ரோ இரயில் திட்டத்தை நிறைவேற்றுவது குறித்தும்;

3. கோயம்புத்தூர் பன்னாட்டு விமான நிலைய விரிவாக்கத்தை துரிதப்படுத்துவது குறித்தும்;

4. கோயம்புத்தூரில் மேற்கு புறவழிச் சாலை திட்டம் மற்றும் கிழக்கு புறவழிச் சாலை திட்டம் ஆகியவற்றை துரிதப்படுத்துவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.

திரு. சு. ரவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சி கொறடா மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. வேலுமணி அவர்கள் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.